# தமிழ்நாடு வேளாண்மைப்  பல்கலைக்கழகம்

## கலந்தாய்வு நடைமுறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2020-21 ம் ஆண்டிற்கான இளங்கலை மாணவர் சேர்க்கை முடிந்து வகுப்புகள் 17.02.2021 முதல் செயல்பட துவங்கியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை முழுமையாக நிறைவுற்றது. தமிநாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை கண்காணிக்க மாண்புமிகு நீதியரசர் திருமதி பிரபா ஸ்ரீதேவன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் வழிகாட்டுதலின்படி, இணைப்புக்கல்லூரிகளில் உள்ள காலியிடங்களுக்கு மாணவர் சேர்க்கைக்கான நேரடி கலந்தாய்வு, மார்ச் மாதம் 1 மற்றும் 3 ம் தேதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் நகர்வு முறை இல்லாமல் நேரடியாக மாணவர் சேர்க்கை நடைபெறும் .

இவ்வாறு நடத்தப்பெறும் கலந்தாய்விற்கான நடைமுறைகள் பின்வருமாறுநேரடி கலந்தாய்வு இணைப்புக் கல்லூரிகளுக்கு மட்டுமே நடைபெறும்

- இணைப்புக் கல்லூரிகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்தாய்வு அரங்கத்தில் இருப்பார்கள்
- கலந்தாய்வு கட்டணம் ரூ. 3000 (SC, SCA and ST ரூ 1500) கல்லூரி மற்றும் பாடப்பிரிவை தேர்ந்தெடுக்கும் மாணவர்களிடம் மட்டுமே வசூலிக்கப்படும்
- மாணவர் சேர்க்கைக்கான காலியிடங்கள் கல்லூரி மற்றும் வகுப்பு வாரியாக கணக்கிடப்பட்டு அத்தகவல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லும் வகையில் இத்தகவல் எல்லா ஊடகங்களிலும் வெளியிடப்படும்
- ஒரு காலி இடத்திற்கு பத்து மாணவர்கள் என்ற அளவில் கணக்கிடப்பட்டு, 1:10 என்ற விகிதத்தில் மாணவர்கள் அழைக்கப்படுவார்கள்

- எனவே கலந்தாய்விற்கு அழைக்கப்பட்டதால் மாணவர்களுக்கு கல்லூரி மற்றும் பாடப்பிரிவு ஒதுக்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் இல்லை.
- இதுவரை வாய்ப்பு கிடைக்காமல் புதிதாக அழைக்கப்படும் மாணவர்களுடன் ஏற்கனவே அழைக்கப்பட்டு கலந்துகொள்ளாத மாணவ மாணவிகளும் இந்த நேரடி கலந்தாய்வில் கலந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்படும்.
- ஒரு நாளைக்கு நான்கு அமர்வுகளாக கலந்தாய்வு நடத்தப்பெறும். ஒவ்வொரு அமர்விலும் கலந்துகொள்ளும் மாணவ மாணவிகளின் வருகையானது பதிவு செய்யப்பட்டு தரவரிசைப்படி அவர்கள் சான்றிழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவார்கள்
- மாணவ மாணவிகளின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, பின்னர் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்

- ஒவ்வொருவரின் முறை வரும்பொழுது எந்த கல்லூரியில் அவர்கள் சார்ந்த சாதிபிரிவு/வகுப்பு அல்லது பொது ஒதுக்கீட்டு பிரிவில் இடம் உள்ளதோ அதில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்
- இவ்வாறு ஒரு கல்லூரியில் இடம் கிடைக்கப்பெற்றவர்கள், கலந்தாய்வு கட்டணம் செலுத்திய பிறகு அவர்கள் தேர்ந்தெடுத்த கல்லூரியின் பிரதிநிதிகளிடம் தங்களுடைய சான்றிதழ்கள் மற்றும் சேர்க்கை கட்டணமாக ரூ 20000 (அல்லது முதல் வருடத்திற்கான கட்டணம்) கட்டாயமாக செலுத்தவேண்டும்.